(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **176**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2017 யூன் 23, வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம,** விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ தயாசிறி ஜயசேகர,** விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்

**கௌரவ திலக் மாரபன,** அபிவிருத்திப் பணிப்பொறுப்புகள் அமைச்சர்

**கௌரவ சந்திம வீரக்கொடி,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் சியம்பலாபிடிய,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** நிதி மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ துலீப் விஜேசேகர,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ சிறிபால கமலத்**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ க. துரைரெட்ணசிங்கம்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ விஜித பேருகொட**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ஈ. சரவணபவன்**

**கௌரவ எம்.எச்.எம். சல்மான்**

**கௌரவ அண்ணாமலை நடேசு சிவசக்தி**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. *சபாநாயகர் தலைமை தாங்கினார்*.**

**1. *சபாநாயகர் பத்திரங்களைச் சமர்ப்பித்தல்*:** சபாநாயகர் பின்வரும் அறிவித்தல்களை விடுத்தார்,—

**I**

"2015 திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் தொடர்பிலான பிரேரணையின் 8 (அ) )viii ) மற்றும் 8 (ஆ) பந்திகளின் பிரகாரம் தெரிவுக் குழுவினால் பாராளுமன்ற உறுப்பினர்கள் கௌரவ திலக் மாரபன மற்றும் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா ஆகியோரை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர் பதவிகளிலிருந்து நீக்கி பாராளுமன்ற உறுப்பினர்கள் கௌரவ அசோக் அபேசிங்க மற்றும் கௌரவ மயந்த திசாநாயக்க ஆகியோரை அக் குழுவில் சேவையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதனை சபைக்கு அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்."

**II**

"2015 திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் தொடர்பிலான பிரேரணையின் 8 (அ) (viii ) பந்தியின் பிரகாரம் தெரிவுக் குழுவினால் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திலக் மாரபன அவர்களை சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன அவர்களை அக் குழுவில் சேவையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்பதனை சபைக்கு அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். "

**III**

"2015 திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் தொடர்பிலான பிரேரணையின் 8 (அ) (viii ) பந்தியின் பிரகாரம் தெரிவுக் குழுவினால் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திலக் மாரபன அவர்களை நல்லிணக்கம் மற்றும் வடக்கையும் கிழக்கையும் மீளக் கட்டியெழுப்புதல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ இம்ரான் மஹ்ரூப் அவர்களை அக் குழுவில் சேவையாற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்பதனை சபைக்கு அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

**IV**

"கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களே, நேற்றைய தினம் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக்கூட்டத்தின்போது, இன்று முதல் வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள உச்ச கால எல்லையை ஒரு மணித்தியாலத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க குழு தீர்மானித்துள்ளதென்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

அக்காலஎல்லையின் இறுதியில் வாய்மூல விடைக்காக ஒழுங்குப் பத்திரத்தில் எஞ்சியுள்ள வினாக்களுக்கான விடைகள் கிடைத்திருப்பின் அவற்றை சபாபீடத்தில் சமர்ப்பிக்கவும், கால அவகாசம் கோரியுள்ள வினாக்களை பிறிதொரு தினத்திற்கு ஆற்றுப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதால் அதன்பொருட்டு வினாக்களை கேட்கின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களினதும் விடையளிக்கின்ற கௌரவ அமைச்சர்களினதும் ஒத்துழைப்பினை நான் எதிர்பார்க்கின்றேன். "

**2. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் வருடாந்த செயற்பாட்டு அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான பொலன்னறுவை மாவட்டச் செயலகத்தின் வருடாந்த செயற்றிறன் அறிக்கையையும் கணக்குகளையும் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தின் செயல் மதிப்பீட்டு அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து. மேற்படி அவ்வறிக்கையை வலுச்சக்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அவ்வறிக்கையை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர், 2013 ஆம் ஆண்டுக்கான கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் தேசிய நிறுவனத்தின் (சமுத்திரப் பல்கலைக்கழகம்) வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழு அறிக்கைகள் சமர்ப்பணம்:** (1) அரசாங்கக் கணக்குக் குழுவின் தவிசாளர் கௌரவ லஸந்த அலகியவன்ன**,** எட்டாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரிற்கான அரசாங்கக் கணக்குக் குழுவின் இரண்டாவது அறிக்கையைச் (2016.05.04 முதல் 2016.10.28 வரையிலான) சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று**.**

(2) சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே சார்பாக அக் குழுவின் அங்கத்தவர் கௌரவ எரான் விக்கிரமரத்ன, சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, “வட மாகாணத்தின் சுற்றுலாப்பயணத்துறை அதிகாரசபை நியதிச்சட்ட வரைவு” தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று**.**

**4. மனுக்கள்:**

(1) (i) காலி, ஹேமாகந்த மாவத்தை, தலகஹஹேன ஒழுங்கை, இல. 1 இல் வதியும் திரு. பியசேன கலகன்கொடகேயினது 2017.03.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) பத்தேகம, ஹால்பாதொட்ட, "செனசும" எனும் முகவரியில் வதியும் திருமதி எஸ்.எம்.எம்.கே. லியனகேயினது 2017.01.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) வக்வெல்ல, ஹபுகல, 5 ஏக்கர், 'மவுன்ட் பிளசன்ட்' எனும் முகவரியில் வதியும் திருமதி யூ.ஜி. சுனேத்ராவினது 2017.02.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ சந்திம வீரக்கொடி சமர்ப்பித்தார்.

(2) பண்டாரவளை, அம்பதென்னவத்த, இரண்டாம் ஒழுங்கை, இல. 20 ஏ யில் வதியும் திரு. எஸ்.என். நடராஸினது 2017.05.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அ. அரவிந்த் குமார் சமர்ப்பித்தார்.

(3) (i) கித்துள்கல, மஹபாகே, பரத்தவலவில் வதியும் திருமதி பீ.எம். ஹெரியட் நோனாவினது 2017.05.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) கித்துள்கல, கோணகமுவ, யகலவத்த, இல. டி 145/3 இல் வதியும் திரு. டி.எம். ஜயரத்ன திசாநாயக்கவினது 2017.05.21 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(iii) கித்துள்கல, புஞ்சி மடவலவில் வதியும் திரு. எம்.எல். சுசந்த சிசிர குமாரவினது 2017.04.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. அனுதாபப் பிரேரணைகள்:** உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகிய காலஞ்சென்ற கௌரவ ஏ. எம். எஸ். அதிகாரியின் பிரேரணையினைச் சமர்ப்பித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகிய காலஞ்சென்ற கௌரவ ஏ. எம். எஸ். அதிகாரியின் மறைவையொட்டி இப்பாராளுமன்றத்தில் இரங்கலுரை நிகழ்த்திய இரு தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சபாநாயகர் ஆகிய நானும் இணைந்துகொண்டு எனது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வுரைகள் அடங்கிய பாராளுமன்ற அதிகார அறிக்கையொன்றின் (ஹன்சாட்) பிரதியை மறைவினால் துக்கத்தில் ஆழ்ந்துள்ள அன்னாரின் குடும்பத்தாருக்கு அனுப்பிவைக்குமாறு பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தைப் பணிக்கின்றேன்.

**6. அனுதாபப் பிரேரணைகள்:** உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகிய காலஞ்சென்ற கௌரவ சந்திர ரணதுங்கவின் பிரேரணையினைச் சமர்ப்பித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகிய காலஞ்சென்ற கௌரவ சந்திர ரணதுங்கவின் மறைவையொட்டி இப்பாராளுமன்றத்தில் இரங்கலுரை நிகழ்த்திய இரு தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சபாநாயகர் ஆகிய நானும் இணைந்துகொண்டு எனது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வுரைகள் அடங்கிய பாராளுமன்ற அதிகார அறிக்கையொன்றின் (ஹன்சாட்) பிரதியை மறைவினால் துக்கத்தில் ஆழ்ந்துள்ள அன்னாரின் குடும்பத்தாருக்கு அனுப்பிவைக்குமாறு பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தைப் பணிக்கின்றேன்.

**7. அனுதாபப் பிரேரணைகள்: உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்,** முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகிய காலஞ்சென்ற கௌரவ மைத்திரிபால ஹேரத்தின் பிரேரணையினைச் சமர்ப்பித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகிய காலஞ்சென்ற கௌரவ மைத்திரிபால ஹேரத்தின் மறைவையொட்டி இப்பாராளுமன்றத்தில் இரங்கலுரை நிகழ்த்திய இரு தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சபாநாயகர் ஆகிய நானும் இணைந்துகொண்டு எனது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வுரைகள் அடங்கிய பாராளுமன்ற அதிகார அறிக்கையொன்றின் (ஹன்சாட்) பிரதியை மறைவினால் துக்கத்தில் ஆழ்ந்துள்ள அன்னாரின் குடும்பத்தாருக்கு அனுப்பிவைக்குமாறு பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தைப் பணிக்கின்றேன்.

**8. அனுதாபப் பிரேரணைகள்: உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்,** முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகிய காலஞ்சென்ற கௌரவ ஆரியரத்ன ஜயதிலகவின் பிரேரணையினைச் சமர்ப்பித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராகிய காலஞ்சென்ற கௌரவ ஆரியரத்ன ஜயதிலகவின் மறைவையொட்டி இப்பாராளுமன்றத்தில் இரங்கலுரை நிகழ்த்திய இரு தரப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சபாநாயகர் ஆகிய நானும் இணைந்துகொண்டு எனது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வுரைகள் அடங்கிய பாராளுமன்ற அதிகார அறிக்கையொன்றின் (ஹன்சாட்) பிரதியை மறைவினால் துக்கத்தில் ஆழ்ந்துள்ள அன்னாரின் குடும்பத்தாருக்கு அனுப்பிவைக்குமாறு பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தைப் பணிக்கின்றேன்.

**9. ஒத்திவைப்பு (பல்கலைக்கழக மாணவர்கள் மீதான அடக்கு முறையும் வைத்திரயர்களின் வேலை நிறுத்தமும்):** “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” எனப் பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

(பி.ப. 3.48 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார். )

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 5.15 மணிக்கு, 2017 யூலை மாதம் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணிவரை பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.